## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.22/2021

2025 –ம் ஆண்டு நவம்பர் மாதம் 13 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 13.11.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.தர்மராஜா (PW–2 ) | வயது | : | 49 /2025 |
| த/க பெயர் | : | திரு. கோவிந்தராஜ் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | சின்னகுருவாடி | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) யாருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் திருக்கொல்லிக்காடு கிராமத்தை சேரந்த வாகித் என்பவர் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அவருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றல் இல்லை வாகித் சொல்லியதால் வந்தேன். தாவா சொத்திற்கும் திருக்கொல்லிக்காடு கிராமத்திற்கும் இடைப்பட்ட தூரம் எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 2 கிலோமீட்டர் இருக்கும். வாகித் என்பவரை எனக்கு எவ்வளவு காலமாக தெரியும் என்றால் 30 ஆண்டுகளாக தெரியும் அவர் எனது நண்பர். வாகித் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார், எந்த சர்வே எண்ணிற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.
2) சின்னகுருவாடி கிராமத்தில் அரசு தொடக்க பள்ளி உள்ளது என்றால் சரிதான். அதன் அருகில் ஒரு திடல் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் பள்ளிக்கூடம் மற்றும் ஊரில் உள்ளவர்கள் விளையாட்டு மைதானமாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. இப்போது அது திடலாக உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் இருவரும் இந்த இடத்தில் விளையாட்டு மைதானம் கட்ட வேண்டும் என அரசு அலுவலகத்தில் கேட்டார்கள் என்றால் சரிதான்.

3) தாவா சொத்து வாகித் என்பவருக்கு சொந்தம் என்பதற்கான ஆவணத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன், சுமார் 5 ஆண்டுகளுக்கு முன், தேதி மாதம் ஞாபகம் இல்லை, அந்த இடத்தை வாகித் அவரது மனைவிக்கு எழுதிக் கொடுத்த பத்திரத்தில நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். அந்த பத்திரம் எழுதும்போது என்னை நண்பர் என்ற முறையில் அழைத்தன் பேரில் நான் சாட்சி கையெழுத்திட்டேன் என்றால் சரிதான்.

4) இருள்நீக்கி கிராமத்தில் சாம்பசிவ ஐயர், சுவாமிநாத ஐயர் ஆகியோருக்கு தாவா சொத்து பூர்வீக சொத்து என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு விபரம் தெரிந்த 49 ஆண்டுகளாக அந்த ஊரில் சாம்பசிவ ஐயர், சுவாமிநாத ஐயர் ஆகியோர் யாரும் இல்லை என்றால் சரிதான். வாதி 30 ஆண்டுகளாக தாவா சொத்தை சாகுபடி செய்து வருகிறார் என்பதற்கான ஆவணங்களை பார்த்தேனா என்றால் இல்லை. எதை வைத்து 30 ஆண்டுகளாக வாதி தாவா சொத்தை சாகுபடி செய்து வருகிறார் என்று சொல்கிறேன் என்றால் வேலைக்கு சென்ற வகையில் தெரியும். வாகித் தற்போது நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான்.

5) வாகித் எனது நண்பர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இருள்நீக்கி கிராமத்தில் சாம்பசிவ ஐயர், சுவாமிநாத ஐயர் ஆகியோருக்கு தாவா சொத்து பூர்வீக சொத்து என்றும் அந்த இடத்தை அவர்கள் கிராமத்திற்கு தானமாக கொடுத்துவிட்டார்கள் என்றும் தற்போது வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாகித் என்பவர் சாம்பசிவ ஐயர், சுவாமிநாத ஐயர் ஆகியோரது கையெழுத்தை மோசடியாக செய்து அதன் பேரில் ஆவணம் ஏற்படுத்தியதை கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதை வாகித்திற்காக அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.18 10:01:31 +0530

District Munsif
Mannargudi.